## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.2/2025 | Deposition of Witness for : PW1 |
| Name : கவிதா | Father/Husband Name : ராஜகோபால் |
| Age : 46 | Village : தேரியூர் |
| Taluk : திருச்செந்தூர் | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10 February 2026.
Accused A1, A2 absent. Petition U/s.355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது தேரியூரில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும், 1 ஆவது எதிரி எனது கணவரின் அக்கா கணவர் ஆவார். 2 ஆவது எதிரி 1 ஆவது எதிரியின் மருமகன் ஆவார்.

2. கடந்த 16.05.2024 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் நான் தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் இருவரும் எங்கள் தோட்டத்திற்குள் வந்து என்னிடம் நீ எவ்வாறு தோட்டத்திற்குள் வரலாம் என்று கேட்டார்கள், அதற்கு நான் அவர்களிடம் இது எங்கள் தோட்டம் நீங்கள் எப்படி உள்ளே வரலாம் என்று கேட்டேன். அதற்கு 2 ஆவது எதிரி சுரேஷ் குமார் என்னிடம் என் மாமனார் ஜெயக்குமார் வாங்கிய தோட்டம், நீ எப்படி உள்ளே வரலாம் என்று கேட்டார். நான் அவரிடம் 1 ஆவது எதிரி எங்களிடம் இடம் எழுதி வாங்கிவிட்டு பணம் கொடுக்காமல் ஓடிவிட்டதால் அவர் மீது குலசேகரன்பட்டினத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறினேன். உடனே 2 ஆவது எதிரி நீ என் மாமனாரை எதிர்த்து பேசுகிறாயா என்று சொல்லி தேவடியா மவளே என்று ஆபாசமாக பேசி உன்னை என்ன செய்கிறேன் பார் என்று சொல்லி 2 ஆவது எதிரி என்னை எட்டி மிதித்தார்.

3. பின்பு 1 ஆவது எதிரி இவளை வெட்டிக் கொன்று தென்னை மரத்தில் புதைத்தால் தான் வேலைக்கு ஆகும், இவளை வெளியில் விடக்கூடாது என்று தேவடியா மகளே என்று ஆபாசமாக பேசினார். உடனே நான் 100 க்கு போன் செய்யும்போது 2 ஆவது எதிரி சுரேஷ்குமார் என் கையை பிடித்து இழுத்துவிட்டார். நான் போலீஸ் வந்தவுடன் யார் தோட்டம் என்று முடிவு செய்யலாம் என்று கூறியபோது எனது தம்பி மணிராஜ் என்பவர் அங்கு வந்தார். எனது தம்பி எதிரிகளிடம் என்ன பிரச்சனை என்று கேட்டபோது 1 ஆவது எதிரி அவரது காரில் இருந்து மண்வெட்டியை எடுத்துக் கொண்டு வரும்போது எனது தம்பி அவரை பிடித்துவிட்டார்.

4. நான் எனது இருசக்கர வாகனத்தில் புறப்படலாம் என்று சாவியை போடும்போது 2 ஆவது எதிரி சுரேஷ் குமார் என் கையை பிடித்து முறுக்கி வண்டியை பூட்டிவிட்டு சாவியை எடுத்துவிட்டார். நாங்கள் 100 க்கு போன் செய்தோம். உதவி ஆய்வாளர் ஒருவர் வந்தார். உதவி ஆய்வாளர் என்னை


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.02.10 16:17:57 +0530

மருத்துவமனைக்கு போகும்படி கூறியதால் நான் உடன்குடியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்பு மாலை காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.02.10 16:18:05 +0530

Judicial Magistrate, Sathankulam.